

மதுரை வடக்கு மாவட்டம் பழங்காநத்தத்தில் நடைபெற்ற கிறிஸ்து பிறப்பு விழா மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்ற கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வடக்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் பி.மூர்த்தி பொன்னாடை போர்த்தி வரவேற்றார். உடன் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்எல்ஏ, மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், மாநில இளைஞரணி துணை செயலாளர்கள் ஜி.பி.ராஜா, இன்பா ரகு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



## தி.மு.க. இளைஞர் அணி

## நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதிக்கான நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

மாவட்டம்–மாநகரம்–ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர் ஆகிய கழக அமைப்புகளில், இளைஞர் அணிக்கு ஏற்கெனவே நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ள நிலையில், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைக் கழக ஒப்புதலுடன் தற்போது ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகளிலும் நகர–பகுதி–பேரூர் வட்டங்களிலும் மற்றும் அனைத்து பாகங்களிலும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த வகையில், நாகப்பட்டினம் மாவட்டத்துக்கு உட்பட்ட நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதிக்கான புதிதாக நியமிக்கப்பட்டுள்ள கிளை, வார்டு மற்றும் பாக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 20.12.2025 சனிக்கிழமை காலை 11.00 மணியளவில், நாகப்பட்டினம், தளபதி அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெறவுள்ளது. நாகப்பட்டினம் சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**அன்பகம்**
தேனாம்பேட்டை,
சென்னை–18.
நாள் : 18.12.2025

கலைஞர் 100
1924 - 2023



# கல்லூரி மாணவர்களுக்கு துணை முதலமைச்சரின் புத்தாண்டுப் பரிசு!







“10 இலட்சம் மாணவர்களுக்கு ஜனவரி புத்தாண்டு விடுமுறை முடிந்து திரும்பியதும் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்படும்” என்று மாண்புமிகு துணைமுதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். தமிழ்நாட்டுக் கல்லூரி மாணவர்களின் புத்தாண்டுக்கு புத்தொளி பாய்ச்சியுள்ளார் நமது கழகத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அவர்கள்!

கல்லூரி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில், செயற்கை நுண்ணறிவுக்கு (AI) ஏற்ற அதிவேக Processor மற்றும் நீண்டநேரம் தாங்கும் Battery என நவீனத் தொழில்நுட்பங்களுடன் இந்த ‘லேப்டாப்’ தயாரித்து வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார் மாண்புமிகு துணை முதல்வர். கல்லூரி மாணவர்கள் வாழ்வில் ஒளியேற்ற ஈரோட்டுக் கண் கொண்டு செயல்படுத்தப்படும் இத்திட்டம் காவிக் கண்களை உறுத்துகிறது.

3ஆம் வகுப்பில் பொதுத்தேர்வு, புதிய கல்விக் கொள்கை, விஷ்வகர்மா திட்டம் என்று மாணவர்களின் வாழ்க்கைக் கனவுகளைக் காவுகேட்கும் மோடியுடைய பாசிச பா.ஜ.க.வின் கூட்டாளி, இனத்துரோகி எடப்பாடி பழனிசாமியும் தன் மடியிலே நெருப்பைக் கொட்டிக்கொண்டது போல கதறுகிறார்.

தேர்தல் காலம் என்பதால் லேப்டாப் தரப்படுகிறதா? கடந்த 2025-26 பட்ஜெட் தொடரிலேயே 20 இலட்சம் மாணவர்களுக்குக் விலையில்லா மடிக்கணினிகள் வழங்கும் அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஆனால் ஆக்கப்பூர்வமான உரையாடலை விரும்பாமல் பாதியிலேயே ஓடிவிடும் எடப்பாடி பழனிசாமிக்கு அது தெரிந்திருக்க வாய்ப்பில்லை. அந்தப் பேரவைக் குறிப்புகளையும் செய்தி படித்த நியூஸ் பேப்பரையும் அவர் பண்ணை வீட்டு அலமாரியில் ஒளித்துவைத்து விட்டார்கள் போல. “ஆண்டின் நடுவே ஏன் தருகிறீர்கள்?'' என்று கேட்கும் எடப்பாடி. ஒரு வேளை, “ஆண்டின் நடுவே ஏன் செமஸ்டர் நடத்துகிறீர்கள்?” என்று கேட்டாலும் கேட்பார்.

மாணவர்களுக்குச் சிறந்த எதிர்காலத்தை உருவாக்கப் பாடுபடும் கழகத் தலைவரின் ‘திராவிட மாடல்’ அரசாங்கத்தின் சாதனைத் திட்டங்களால் பயன்பெறும் ஏழை எளியோர் மீது அக்கறை இருக்கும் அத்தனைபேரும் விலையில்லா மடிக்கணினிகள் அறிவிப்பைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

பத்தாண்டு கால அ.தி.மு.க. அவல ஆட்சியைத் துடைத்தெறிய விடியலைத் தேர்ந்தெடுத்த மக்களுக்குத் தொழில்நுட்ப வசந்தத்தைக் கொடுக்கிறது நமது கழகத் தலைவர் தலைமையிலான ‘திராவிட மாடல் அரசு!’ முன்னேற்றச் சாரலைப் பொழிகிறது கழக அரசு!

**தமிழ் கா.அமுதரசன்**
மாநில துணைச் செயலாளர்–
தி.மு.க. மாணவர் அணி



